வித்தாலி பியான்கி

செம்மலை

சின்னஞ் சிறு செந்தலைச் சிட்டுக்குருவி ஒன்று இருந்தது. அதற்குச் சிக்கு என்று பெயர். ஓர் ஆண்டு நிரம்பியதும் அது சிரிக்காவை மணந்து கொண்டது. தமக்கொரு கூடு கட்டுவதென சிக்கு முடிவு செய்தது.

''சிக்கு! கூட்டை நாம் எங்கே கட்டுவது?'' என்று சிட்டுக்குருவி மொழியில் கேட்டது, சிரிக்கா. ''நமது தோப்பின் மரங்களில் எந்தப் பொந்தும் காலியாய் இல்லையே'' என்றது அது.

''இது என்ன பெரிய காரியம்!'' என்றது சிக்கு, சிட்டுக் குருவி மொழியில். ''அண்டை அயலாரை விரட்டியடிப்போம், காலியாகும் அந்தப் பொந்தில் கூட்டைக் கட்டுவோம்'' என்று கூறிற்று.

வீம்புச் சண்டையில் சிக்குவுக்கு விருப்பம் அதிகம். தனது சூரத்தனத்தைச் சிரிக்காவுக்குக் காட்ட நல்லதொரு வாய்ப்பு கிடைத்திருப்பதாய் அது மனம் மகிழ்ந்து கொண்டது. சாதுவான சிரிக்கா அதைத் தடுத்து நிறுத்துவதற்குள் மரக்கிளையிலிருந்து தாவி, ஒரு பெரிய மரத்திலிருந்த பொந்தை நோக்கிப் பறந்தது. சிக்குவைப் போல் அதே வயதுள்ள ஒரு சிட்டு அதில் வசித்து வந்தது.

இப்பொழுது அந்தச் சிட்டு பொந்தினுள் இல்லை.

''பொந்துக்குள் புகுந்து கொள்வேன், பிறகு உடையவன் வந்ததும் பெருங் கூச்சல் போட்டு, என்னுடைய வீட்டிலிருந்து என்னைத் துரத்தப் பார்க்கிறான் என்று கத்துவேன், உடனே பெரிய சிட்டுகள் இங்கு வந்து கூடும், உடையவனுக்குச் செம்மையாய் உதை கிடைக்கும்'' என்று சிக்கு நினைத்தது.

ஆனால் அந்தப் பொந்தில் வசித்த சிட்டுக் குருவிக்கு மணமாகியிருந்ததையும், அதனுடைய மனைவி ஐந்து நாட்களாய் அந்தப் பொந்தில் கூடு கட்டி வந்ததையும் சிக்கு அறவே மறந்து விட்டது.

பொந்தின் வாய்க்குள் சிக்கு தலையை விட்டதும் வலிக்கும்படி அதன் மூக்கில் யாரோ பலமாய்க் குத்தவே, கீச்சிட்டுக் கொண்டு அது வெளியே குதித்தது. அந்த நேரத்தில் பொந்தின் சொந்தக்காரக் குருவி பின்புறத்திலிருந்து சிக்குவைத் தாக்கிற்று. இரண்டு குருவிகளும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு தரையில் விழுந்து புரண்டு ஒரு குழிக்குள் உருண்டன.

போராடுவதில் சிக்கு இணையற்றது. பொந்தின் சொந்தக்காரக் குருவி சமாளிக்க முடியாமல் பின்னடைந்து வந்தது.

இந்த அமளியின் இரைச்சலைக் கேட்டுப் பெரிய சிட்டுகள் பலவும் பறந்து வந்து அங்கே கூடின. குற்றவாளி யாரென்பது தெரியவே அவை சிக்குவை நையப் புடைத்தன. எப்படி அவற்றிடமிருந்து தன்னால் தப்பிக்க முடிந்தது என்று சிக்குவுக்கு நினைவில்லை.

இதன்முன் அது பார்த்திராத ஒரு புதருக்கு அடியில் கிடக்கையில்தான் அதற்குச் சுய நினைவு திரும்பிற்று. அதன் உடலின் ஒவ்வோர் எலும்பிலும் வலித்தது.

கதிகலங்கிப் போன சிரிக்கா அதன் அருகே உட்கார்ந்திருந்தது.

''சிக்கு'' என்று ஆற்றெணுத் துயரம் தொனிக்கும் குரலில் அது கூப்பிட்டது. குருவிகளுக்கு அழத் தெரியாது, இல்லேயேல் அந்தத் துயரக் குரலேக் கேட்ட சிக்குவுக்கு நிச்சயம் அழுகை வந்திருக்கும். ''சிக்கு, இனி நம்மால் இந்தத் தோப்பின் பக்கம் தலே காட்ட முடியாது! எங்கே போய் நாம் குஞ்சு பொரிப்பது?'' என்று சிரிக்கா கேட்டது.

அந்தப் பெரிய குருவிகளின் கண் முன்னே இனி தான் போகக் கூடாது, போனுல் அவை அடித்துக் கொன்றுவிடும் என்பது சிக்குவுக்கும் தெளிவாகவே தெரிந்தது.

ஆயினும் தான் பயப்படுவதாய்ச் சிரிக்காவுக்குக் காட்டிக் கொள்ள அது விரும்ப வில்லே. கலேந்த சிறகுகளேத் தனது அலகால் சரி செய்து கொண்டது. மூச்சுத் திணறல் நின்றதும், ''இது என்ன பெரிய காரியம்! இந்தத் தோப்பைவிட வசதியான வேருேர் இடம் பார்த்துக் கொள்வோம்!'' என்று சொல்லிற்று.

இரண்டும் புதிய இடத்தைத் தேடி அங்கிருந்து பறந்தன.

புதரை விட்டு வெளியே பறந்ததும் கண்ணுக்கினிய நீல ஆறு ஒன்றைக் கண்ணுற்றன. ஆற்றுக்கு அப்பால் உயரமான செம்மண் மலே ஒன்று தெரிந்தது. மலேயின் உச்சிக்கு அருகே செங்குத்துச் சரிவில் மிகப் பல பொந்துகளும் வளேகளும் இருக்கக் கண்டன. பெரிய பொந்துகளுக்கு அருகே ஜோடி ஜோடியாய் அண்டங் காக்கைகளும் பருந்துகளும் உட்கார்ந்திருந்தன. சிறிய துளேகளிலிருந்து வலியன்

குருவிகள் வெளியே பறந்து வந்தன. வெண்ணிறக் குருவிகள் கூட்டமாய்ச் சிறு மேகம் போல் மலைக்கு மேல் பறந்து கொண்டிருந்தன.

''எல்லாம் எவ்வளவு குதூகலமாய் இருக்கின்றன, பார்! நாமும் இந்தச் செம் மலையில் கூடு கட்டிக் கொள்ளலாம், வா!'' என்றது சிரிக்கா.

அண்டங்காக்கைகளையும் பருந்துகளையும் திகிலுடன் உற்று நோக்கியவாறு, சிக்கு ''வலியன் குருவிகளுக்குப் பரவாயில்லை, அவைத் தமக்கு வேண்டிய வளைகளைத் தாமே தோண்டிக் கொள்கின்றன. ஆனால் நான் அயலாரின் கூட்டை அல்லவா போராடிப் பிடித்துக் கொண்டாக வேண்டும்!'' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டது. உடனே அதற்கு மீண்டும் எலும்புகளில் வலிக்க ஆரம்பித்தது.

''வேண்டாம் இது! எனக்கு இந்த இடம் பிடிக்கவில்லை. ஒரே இரைச்சல், காது செவிடாகிவிடும் போல் இருக்கிறது!'' என்றது.

சிட்டுகள் இரண்டும் தொடர்ந்து பறந்து சென்றன.

சிறிது தொலைவில் ஒரு தோப்பும், அதற்கு அப்பால் மரக் கொட்டகையுடன் கூடிய சிறிய வீடும் இருக்கக் கண்டன.

சிக்கும் சிரிக்காவும் அந்தக் கொட்டகையின் கூரை மீது உட்கார்ந்தன. அங்கு சிட்டுக் குருவிகளோ, வலியன் குருவிகளோ இல்லை என்பதைச் சிக்கு உடனே கவனித்தது.

''இங்கு நாம் இனிது வாழலாம். முற்றத்தில் தானியமும் ரொட்டித் துண்டுகளும் நிறைய இருப்பதைப் பார்! அந்நியர் யாரையும் நெருங்க விடாமல் தனியே நாம் இங்கு வாழலாம்'' என்றது சிக்கு.

''ஐயோ, இதோ பார், சிக்கு! எவ்வளவு பயங்கரமான பிராணி அங்கே வாயில் முகப்பில் இருக்கிறது, பார்!'' என்றது சிரிக்கா.

சிரிக்கா கூறியது மெய்தான். பருத்துக் கொழுத்த சிவப்புப் பூனை ஒன்று வாயில் முகப்பில் தூங்கிக் கொண்டிருந்தது.

''இது என்ன பெரிய காரியம்!'' என்று சிக்கு வீறுப்புப் பேசிற்று. ''நம்மை அது என்ன செய்ய முடியும். இதோ பார், அதைப் பயந்து நடுங்க வைக்கிறேன்!'' என்றது.

உடனே சிக்கு பறந்து சென்று பூனை மீது ஒரு தாவு தாவிற்று. அது தாவிய வேகத்தைப் பார்த்துச் சிரிக்கா பயந்து போய்க் கீச்சிட்டுக் கத்திவிட்டது.

ஆனால் சிக்கு வெடுக்கெனப் பாய்ந்து பூனையின் மூக்குக்கு முன்னால் கிடந்த ரொட்டித் துண்டை கவ்விக் கொண்டு கூரைக்குத் திரும்பிற்று.

பூனை எதையும் பொருட்படுத்தாமல் அசையாமல் அப்படியே படுத்திருந்தது. ஒரு கண்ணை மட்டும் திறந்து குறும்புக்காரச் சிக்குவைப் பார்த்து வைத்துக் கொண்டது.

''என்ன செய்தேன் பார்த்தாயல்லவா? இனியுமா உனக்குப் பயம்?'' என்று சிக்கு பெருமையடித்துக் கொண்டது.

சிரிக்கா அதனிடம் வாதாடவில்லை. எங்கே கூடு கட்டலாம் என்று இரண்டுமாய் நல்ல இடத்தைத் தேட ஆரம்பித்தன.

முடிவில் கொட்டகையின் கூரைக்கு அடியில் ஒரு சிறு இடுக்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டன. முதலில் வைக்கோலும், பிறகு குதிரைமுடி, இறகுகள், மெல்லிழை முதலியவற்றையும் கொண்டு வந்து சேர்த்தன.



ஒரு வாரம்கூட கழிந்திருக்காது, அதற்குள் கூட்டினுள் சிரிக்கா முதலாவது முட்டையை இட்டது. அந்தச் சின்னஞ் சிறிய முட்டையில் திட்டுத் திட்டாய் இளஞ்சிவப்பிலும், சாம்பல் நிறத்திலும் புள்ளிகள் இருந்தன. மட்டிலா மகிழ்ச்சி கொண்ட சிக்கு, தன் மனைவியையும் தன்னையும் போற்றிப் பாட முற்பட்டது.

சிரிக், சிக்-சிக்,
சிரிக், சிக்-சிக்,
சிக்கி-சிக்கி-சிக்கி-சிக்கி,
சிக்கி, சிக்-சிரிக்!

உண்மையில் இந்தச் சிறு பாட்டு பொருளற்றதுதான். வேலியில் தத்தித் தாவும் போது இந்த எளிய பாட்டு பாடுவதற்கு ஆனந்தமாயிருந்தது.

கூட்டில் ஆறு முட்டைகள் சேர்ந்தவுடன், சிரிக்கா அடைகாக்க ஆரம்பித்தது.

சிரிக்காவுக்குப் புழுவும் பூச்சியும் கொண்டு வருவதற்காகச் சிக்கு பறந்து செல்லும். அடைகாக்கும் வேளையில் சிரிக்காவுக்குச் சுவை மிகுந்த மிருதுவான உணவு தேவையாயிருந்தது. சிக்கு திரும்பி வரச் சிறிது நேரமானதும், சிரிக்கா கவலை கொண்டு வெளியே எட்டிப் பார்க்க விரும்பிற்று.

இடுக்கிலிருந்து அது எட்டிப் பார்த்ததும், கூர்மையான நகங்களையுடைய ஒரு பெரிய பாதம் கூரைக்கு மேலிருந்து தோன்றிச் சிரிக்காவின் சிறகுகளைப் பிடித்துக் கொண்டது. திடுக்குற்றுக் கீச்சிட்டவாறு சிரிக்கா தாவிப் பறந்தது. ஒரு கொத்து இறகுகளை மட்டும் பூனையின் பிடியில் விட்டுவிட்டு அது தப்பித்துக் கொண்டது. கணப் பொழுது தாமதம் செய்திருந்தாலும் பூனையிடம் நிச்சயம் அகப்பட்டுக் கொண்டு இருக்கும்.

சிரிக்கா பறந்தோடிவிட்டதைக் கண்டதும் பூனை பாதத்தை இடுக்குக்குள் விட்டு வைக்கோலும் இறகும் மெல்லிழையுமான அந்தக் கூட்டைப் பிடித்து அப்படியே வெளியே இழுத்தது. சிரிக்கா எவ்வளவோ கூச்சலிட்டுப் பார்த்தது, சிக்கு துணிச்சலுடன் பூனை மீது தாக்குதல் தொடுத்தது, ஆனால் பயன் ஏதும் இல்லை. யாரும் அவர்களுக்கு உதவ வரவில்லை. அருமையான ஆறு முட்டைகளையும் அந்தக் கொள்ளைக்காரச் சிவப்புப் பூனை தின்று தீர்த்தது. வெற்றுக் கூட்டைக் காற்று மிக சுலபமாகக் கூரையிலிருந்து இழுத்துச் சென்று விட்டது.

சிட்டுக் குருவிகள் இரண்டும் அன்றே அந்தக் கொட்டகையை விட்டுத் துறந்து, சிவப்புப் பூனையிடமிருந்து நெடுந் தூரம் பறந்து எங்கோ தொலைவில் ஒரு தோப்பில் குடியேறின.

அவற்றின் அதிர்ஷ்டம் அந்தத் தோப்பில் காலிப் பொந்து ஒன்று இருந்தது. மீண்டும் அவை வைக்கோலும் பிறவும் சேகரிக்க முற்பட்டன. ஒரு வாரம் பூராவும் வேலை செய்து அந்தப் பொந்தினுள் கூட்டைக் கட்டின.

தடிமூக்குச் சிச்சிலியும் அதன் மனைவியும், ஈபிடிச்சானும் அதன் மனைவியும், ஒய்யாரத் தங்கத் தித்திரியும் அதன் மனைவியும் அவற்றின் அக்கம் பக்கத்தினராய்க் குடியிருந்தன. ஒவ்வொரு ஜோடிக்கும் தனியே கூடு இருந்தது, உணவும் வேண்டிய மட்டும் கிடைத்தது. ஆயினும் சிக்கினால் சும்மாயிருக்க முடியவில்லை. தனது வீரதீரத்தை எல்லோருக்கும் தெரியப்படுத்த வேண்டுமென்று அக்கம் பக்கத்துக் குருவிகளோடு சண்டை போட ஆரம்பித்தது.

ஆனால் சிச்சிலிக் குருவி சிக்குவைவிட பலசாலியாய் இருந்தது, சிக்குவுக்கு அது செம்மையாய்த் திருப்பிக் கொடுத்தது. இதன்பின் சிக்குவுக்குக் கொஞ்சம் புத்தி வந்தது. வீம்புச் சண்டை துவக்குவதை அது விடுத்தது. அக்கம் பக்கத்துக்

குருவிகள் அருகே செல்லும் போது இறகுகளைச் சிலுப்பிக் கொண்டு போர் முழக்க மெனத் தொனிக்கும்படிக் கீச்சுக் குரலில் கத்துவதுடன் நிறுத்திக் கொண்டது. அக்கம் பக்கத்துக் குருவிகளும் தமது வீரதீரம் குறித்துப் பெருமையடித்துக் கொள்ள ஆசைப்படுகிறவைதான், ஆகவே அவை சிக்குவின் இந்த ஆடம்பரத்தைப் பொருட்படுத்தவில்லை.

யாவற்றுக்கும் முதலாய்ச் சிச்சிலிதான் அபாய அறிவிப்புக் கூச்சலை எழுப்பிற்று. சிட்டுகளின் அக்கம் பக்கத்துக் குருவிகளில் அதுதான் சற்று தூரத்தில் வசித்து வந்தது. ''இயூம்-பிம்-பிம்! இயூம்-பிம்-பிம்!'' என்று அங்கிருந்து அது எழுப்பிய அபாய அறிவிப்புக் கூச்சல் சிக்குவின் காதுக்கு எட்டிற்று.

''சீக்கிரம், சீக்கிரம்!'' என்று சிக்கு கூக்குரலிட்டுச் சிரிக்காவை உசுப்பிற்று. ''சிச்சிலி கூச்சல் எழுப்புவது கேட்கவில்லையா உனக்கு? ஆபத்து நெருங்கி வருவதை அறிவிக்கிறது அது!'' என்று அது கத்திற்று.

சிக்கு சொன்னது சரிதான். பயங்கரமான பிராணி ஒன்று நெருங்கி வந்து கொண்டிருந்தது. சிச்சிலியைத் தொடர்ந்து தங்கத் தித்திரி அபாய அறிவிப்புக் குரல் கொடுத்தது, பிறகு ஈபிடிச்சானும் அபாயத்தை அறிவித்தது. சிக்குவின் மரத்திலிருந்து நாலே நான்கு மரத் தொலைவில் இந்த ஈபிடிச்சான் வசித்து வந்தது. பகைவன் அதன் கண்ணுக்குத் தெரிகிறான் என்றால் மிகவும் நெருங்கி வந்து விட்டான் என்றல்லவா அர்த்தம்?

சிரிக்கா பறந்து வந்து சிக்குவின் பக்கத்தில் கிளையில் உட்கார்ந்து கொண்டது. அக்கம் பக்கத்தவர்கள் சிட்டுகள் இரண்டையும் நெருங்கி வரும் அபாயம் குறித்து எச்சரிக்கை செய்ததால், இவை தயாராய் விழிப்புடன் இருந்தன.

இரு சிட்டுகளும் புதர்களிடையே பொசபொசப்பான சென்னிற முடிகள் தெரியக் கண்டன. விரைவில் அவற்றின் பயங்கரப் பகைவனுகிய அந்தச் சிவப்புப் பூனே புதர்களுக்குள்ளிருந்து வெளியே வந்தது. தான் வருவதை அக்கம் பக்கத்துக் குருவிகள் அறிவித்து விட்டன, இனி சிரிக்காவை அதன் கூட்டுக்குள் பிடிக்க முடியாது என்பது அந்தப் பூனேக்குத் தெரிந்து விட்டது—ஆகவே அது சீற்றங் கொண்டிருந்தது.

திடுமென அதன் வாலின் நுனி அதிர்ந்தாடிற்று, அதன் கண்கள் கோடுகளாய்ச் சுருங்கி விட்டன—மரப்பொந்தை அது கண்டு கொண்டுவிட்டது. அரை டஜன் சிட்டுக் குருவி முட்டைகள் அல்லவா கிடைக்கும்? காலேப் பொழுதில் நல்ல உணவாயிற்றே! பூனே உதட்டை நக்கிக் கொண்டது. மரத்தில் ஏறிப் பொந்துக்குள் பாதத்தை நுழைத்தது.

சிக்கும் சிரிக்காவும் குய்யோ முறையோ என்று கூச்சலிட்டன. ஆனால் இங்கும் அவற்றுக்கு உதவி புரிய யாரும் முன்வரவில்லை. அக்கம் பக்கத்துக் குருவிகள் தத்தமது மரங்களில் உட்கார்ந்து கொண்டு பீதியோடு சப்தம் போட்டன. தன்னுடைய கூடு என்னுகுமோ என்று அந்தந்த ஜோடியும் அஞ்சிக் கூச்சலிட்டது.

பூனை தனது கூர்மையான நகங்களால் கூட்டைப் பிடித்துப் பொந்திலிருந்து வெளியே இழுத்தது. ஆனால் இம்முறை பூனை காலத்துக்கு முன்னதாகவே வந்து விட்டது. எவ்வளவோ தேடியும் கூட்டில் முட்டை ஒன்றுகூட கிடைக்கவில்லை.

பிறகு கூட்டைக் கீழே போட்டுவிட்டு பூனை கீழே இறங்கிற்று. சிட்டுக் குருவிகள் பயங்கரமாய்க் கூச்சலிட்டுக் கத்தின.

பூனை புதருக்குள் சென்று அங்கிருந்து திரும்பிச் சிட்டுக் குருவிகளை உற்று நோக்கிற்று. ''இருக்கட்டும் பார்ப்போம்! சிட்டுகளே, என் கண்ணில் படாமல் உங்களால் ஒளிந்து கொண்டுவிட முடியவே முடியாது! எங்கு வேண்டுமானாலும் போய் மறுபடியும் கூடு கட்டிக் குஞ்சு பொரியுங்கள், எப்படியும் நான் தேடிப் பிடித்து உங்கள் குஞ்சுகளைத் தின்னவே போகிறேன்! அவற்றோடு உங்களையும் சேர்த்து விழுங்கவே போகிறேன்!'' என்று அறிவிப்பது போல இருந்தது, அது பார்த்த பார்வை. பூனை பேய்த்தனமாய் உர்ரென உறுமிற்று. அதைக் கேட்டதும் சிரிக்காவுக்கு அங்கமெலாம் நடுங்கிற்று.

பூனை போய்ச் சேர்ந்ததும் சிக்கும் சிரிக்காவும் நாசமாக்கப்பட்ட தமது கூட்டுக்கருகே சோகமே உருவெடுத்தாற் போல் அமர்ந்திருந்தன.

முடிவில் சிரிக்கா சொல்லிற்று:

''சிக்கு, இன்னும் சில நாட்களில் கட்டாயம் நான் புதிதாய் முட்டையிடுவேன். பூனை நம்மை நெருங்க முடியாதபடி ஆற்றுக்கு அப்பால் நமக்கு ஓர் இடம் தேடிக் கொள்வோம், புறப்படு சீக்கிரம்!''

ஆற்றில் அங்கு ஒரு பாலம் இருந்தது. பூனை அடிக்கடி அந்தப் பாலத்தின் வழியே ஆற்றைக் கடந்து அப்பால் செல்வதுண்டு. ஆனால் இது சிரிக்காவுக்குத் தெரியாது, சிக்குவுக்கும் தெரியாது. எனவே சிக்கு, ''சரி புறப்படு, போவோம்'' என்று சம்மதித்தது.

இரண்டும் பறந்து சென்றன.

விரைவில் அவை மீண்டும் அதே செம்மலைக்கு வந்து சேர்ந்தன.

''வாங்க, வாங்க!'' என்று வலியன் குருவிகள் அவற்றின் குருவி மொழியில் இரு சிட்டுக் குருவிகளையும் வரவேற்றன. ''இங்கே நாங்கள் எல்லோரும் எங்களுடைய செம்மலையில் குதூகலக் குடும்பமாய் ஒன்றுசேர்ந்து வாழ்கிறோம்'' என்றன அவை.

''நீங்கள் எங்களுடன் சண்டைக்கு வருவீர்களோ என்று எனக்குப் பயமாய் இருக்கிறது'' என்றது சிக்கு.

''எதற்காக நாங்கள் சண்டைக்கு வர வேண்டுமாம்'' என்று வலியன் குருவிகள் பதிலளித்தன. ''ஆற்றின் ஓரத்தில் ஏராளமாய் ஈசல்கள் பறக்கின்றன. ஒவ்வொரு குருவியும் வேண்டிய மட்டும் பிடித்துத் தின்னலாம். காலிப் பொந்துகள் நிறைய இருக்கின்றன. உங்களுக்குப் பிடித்தமானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறின.

''அண்டங்காக்கைகளும் பருந்துகளும் இருக்கின்றனவே'' என்றது சிக்கு.

''அவை வயல் வெளிகளில் தத்துக்கிளியும் எலியும் பிடித்துத் தின்கின்றன. அவற்றால் எங்களுக்கு ஒரு தொல்லையும் இல்லை. நாங்கள் எல்லோரும் நண்பர்களாய் வாழ்கிறோம்.''

உடனே சிரிக்கா,

''இதைக் கேள், சிக்கு! நாமும் நெடுந் தொலைவு பறந்து தேடிப் பார்த்தோம். இதைவிட அழகான இடத்தைப் பார்த்ததில்லை. இங்கேயே தங்கி விடுவோம்'' என்றது.

''சரி, இங்கே காலிப் பொந்துகள் இருக்கின்றன, இங்கு நம்மிடம் யாரும் சண்டைக்கு வரப் போவதில்லை, நாமும் இங்கே வாழ்ந்து பார்க்கலாம்'' என்றது சிக்கு.

இரண்டும் நெருங்கிச் சென்ற பிறகும் அண்டங்காக்கைகளும், பருந்துகளும் அவற்றைக் கவனியாது சும்மாயிருந்தன.

அதிக ஆழமில்லாததும் அகலமான வாயிலைக் கொண்டதுமான ஒரு பொந்தாய் அவைத் தேடத் தொடங்கின. ஒன்றுக்கொன்று நெருங்கி அமைந்த இப்படிப்பட்ட இரு பொந்துகள் கிடைத்தன.

ஒரு பொந்தில் அவைக் கூட்டைக் கட்டின, அதில் சிரிக்கா முட்டையிட்டு அடை காக்க ஆரம்பித்தது. மற்றொரு பொந்தில் சிக்கு இரவில் தூங்கிற்று.

வலியன் குருவிகளும் அண்டங்காக்கைகளும் பருந்துகளும் முன்பே குஞ்சு பொரித்து விட்டன. சிரிக்கா இருண்ட தனது சிறு பொந்தில் கூட்டினுள் தனியே பொறுமையாய் உட்கார்ந்திருந்தது. விடிந்ததிலிருந்து இருட்டுகிற வரை சிக்கு அதற்கு உணவு தேடி எடுத்து வந்து தந்தது.

இரண்டு வாரங்கள் சென்றன. சிவப்புப் பூனை தலை காட்டவே இல்லை. சிட்டுக் குருவிகளும் அதைப் பற்றி மறந்தே விட்டன.

சிக்கு தன்னுடைய குழந்தைகளின் வருகைக்காகப் பொறுமையின்றி காத்துக் கொண்டிருந்தது. சிரிக்காவுக்குப் புழுவோ, ஈயோ கொண்டுவந்து கொடுக்கும் தோறும் அது,

''குஞ்சுகள் தட்டத் தொடங்கி விட்டனவா?'' என்று விசாரித்துக் கொண்டிருந்தது.

''இன்னும் தட்டத் தொடங்க வில்லை.''

''சீக்கிரம் தட்டப்போகின்றனவா?''

''சீக்கிரம் தட்டும், பாரேன்'' என்று சிரிக்கா பொறுமையோடு சிக்குவுக்கு உறுதி மொழி கூறும்.

ஒரு நாள் காலையில் பொந்திலிருந்து சிரிக்கா தலையை நீட்டி சிக்குவை அழைத்து, ''சீக்கிரமாய் வந்து பாரேன்! ஒரு குஞ்சு தட்ட ஆரம்பித்து விட்டது!'' என்றது.

உடனே சிக்கு கூட்டுக்குப் பறந்து வந்தது. ஒரு குஞ்சு முட்டை ஓட்டுக் குள்ளிருந்து மெல்லிய அலகால் தட்டும் சத்தம் சிக்குவின் காதில் விழுந்தது.

சிரிக்கா கவனமாய் ஓட்டில் பல இடங்களில் உடைத்துக் குஞ்சுக்கு உதவி புரிந்தது.

சில நிமிடங்களுக்குள் குஞ்சு முட்டையிலிருந்து வெளியே தலையை நீட்டிற்று. அது மிகச் சிறியதாய், அம்மணமாய் இருந்தது, கண்ணுங்கூட இன்னும் திறக்க வில்லை. மெலிந்து நீண்ட கழுத்தில் பருத்துப் பெருத்த தலை அசைந்தாடிற்று.

''இப்படி விநோதப் பிறவியாய் இருக்கிறதே'' என்று சிக்கு திகைப்புற்றுக் கூறிற்று.

''விநோதப் பிறவி ஒன்றுமில்லை, அருமையான குழந்தை! உனக்கு இங்கு வேலை யில்லை, இந்தக் காலி ஓட்டை எடுத்துச் சென்று தூர போடு நீ'' என்று குரலில் கோபம் தொனிக்கக் கூறிற்று சிரிக்கா.

சிக்கு அந்தக் காலி ஓட்டை எடுத்துக் கொண்டு பறந்த போது இரண்டாவது குஞ்சும் முட்டையிலிருந்து வெளியே வந்தது. அதே போது மூன்றாவது குஞ்சு முட்டை ஓட்டைத் தட்ட ஆரம்பித்தது.

அதன்பின் செம்மலையில் அபாய அறிவிப்புக் கூச்சல்கள் எழுந்தன.

காதைத் துளைக்கும்படி வலியன் குருவிகள் எழுப்பிய கூச்சலைப் பொந்துக்குள் இருந்த சிட்டுக் குருவிகள் கேட்டன. உடனே சிக்கு வெளியே பறந்தோடிப் பார்த்து விட்டு, சிவப்புப் பூனை மலைச் சரிவின்மீது ஏறி வரும் அபாயச் செய்தியைச் சிரிக்காவுக்குத் தெரிவித்தது.

''பூனை என்னைத் தெரிந்து கொண்டு விட்டது!'' என்று சிக்கு கூவிற்று. ''விரைவில் அது இங்கே வந்து நம்முடைய குஞ்சுகளுடன் கூட நம்மையும் பிடித்துக் கொண்டு விடும்! சீக்கிரம், புறப்படு! இங்கிருந்து பறந்தோடியாக வேண்டும்!'' என்று கத்திற்று.

''நான் வரப் போவதில்லை'' என்று துயரம் தொண்டையை அடைக்கச் சிரிக்கா பதிலளித்தது. ''என்னுடைய சின்னஞ்சிறு குஞ்சுகளை விட்டு நான் பிரியப் போவதில்லை! நடப்பது நடக்கட்டும், இங்கேயே இருக்கிறேன்'' என்றது அது.

சிக்கு எவ்வளவோ வற்புறுத்தியும் சிரிக்கா நகர மறுத்துவிட்டது.

பிறகு சிக்கு பொந்திலிருந்து வெளியே பறந்து, பூனையை வெறித்தனமாய்த் தாக்க ஆரம்பித்தது. ஆனால் பூனையோ தொடர்ந்து மேலே ஏறிக் கொண்டிருந்தது. வலியன் குருவிகள் பெருந் திரளாய்ப் பறந்து வந்து பூனையின் தலைக்கு மேல் வட்டமிட்டன. பருந்துகளும் அண்டங்காக்கைகளும் காட்டுக் கூச்சலிட்டு எழுந்து வலியன் குருவிகளுக்கு உதவ முன்வந்தன.

பூனை வேகமாய் ஏறிப் பொந்தின் ஓரத்தில் பாதத்தை வைத்தழுத்தி எம்பிற்று.

பாதத்தைப் பொந்துக்குள் நுழைத்துச் சிரிக்காவையும் குஞ்சுகளையும் முட்டைகளுடன் அப்படியே கூட்டை அது வெளியே இழுக்க வேண்டியதுதான் பாக்கி.

ஆனால் அதே கணத்தில் ஒரு பருந்து பூனையின் வாலைக் கொத்திற்று, மற்றொன்று அதன் தலையில் ஓங்கி அடித்தது. இரு அண்டங்காக்கைகள் அதன் முதுகில் தாக்கின.

பூனை வலி பொறுக்க மாட்டாமல் சீறியபடி வெடுக்கெனத் திரும்பிப் பறவைகளைத் தன் பாதத்தால் பற்றிக் கொள்ள முயன்றது. ஆனால் பறவைகள் பூனையின் நகங்களிலிருந்து தப்பித்துக் கொண்டன. பூனை மலைச் சரிவிலே சரிந்து உருண்டது, பற்றிக் கொள்ள அதற்கு ஒன்றும் கிடைக்காமற் போனதால் நிற்காமல் உருண்டு சென்றது. பெயர்ந்து விழுந்த செம்மண்ணுடன் சேர்ந்து பூனையும் மேலும் மேலும் வேகமாய் உருண்டு சென்றது.

பறவைகளுடைய பார்வையிலிருந்து நெடுந் தூரம் பூனை சரிந்து உருண்டு சென்றுவிட்டது: செம்மண் புழுதி எழுந்தது மட்டும்தான் தெரிந்தது. இந்தப் புழுதி ஆற்றை அடைந்ததும் தொப்பென்று பூனை நீரில் விழுந்த சப்தம் கேட்டது. புழுதி அடங்கியதும் பறவைகள் நடு ஆற்றில் பூனையின் ஈரத் தலை தெரியக் கண்டன. பூனைக்கு மேல் சிக்கு வட்டமிட்டுப் பறந்து அதன் தலையில் மொத்திச் சென்றது.

பூனை ஆற்றைக் கடந்து எதிர்க் கரையில் ஏறிற்று. அதன் பிறகு தரையிலும் ...ாமல் சிக்கு அதை விரட்டிச் சென்றது. மிரண்டு போய்க் கலக்கமுற்றிருந்த ... சிக்குவைப் பிடிக்க முயலவில்லை. நனைந்த வாலை உயர்த்திக் கொண்டு அது ...டமாய் ஓடிற்று.

சிவப்புப் பூனை அது முதலாய்ச் செம்மலையின் பக்கம் தலை காட்டவே இல்லை.

ஓவியர்: யெ. சரூஷின்
மொழிபெயர்ப்பாளர்: ருக்மணி

В. Бианки
КРАСНАЯ ГОРКА
На тамильском языке

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

© உரிமைப் பதிவு, தமிழ் மொழிபெயர்ப்பு: ''முன்னேற்றப் பதிப்பகம்'' 1975

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Б $\frac{70802\text{-}1065}{014\ (01)\text{-}75}$ 763-75